# தகவல் தாள் - நடைமுறையில் இருக்கும் பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவு

**நடைமுறையில் இருக்கும் பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவு என்றால் என்ன?**

பள்ளி முதல்வர்கள் மற்றும் கல்வி மற்றும் பயிற்சித் துறையின் ஊழியர்கள் போன்ற சில நபர்கள் 'அங்கீகரிக்கப்பட்ட நபர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். நீங்கள் பள்ளிக்குச் செல்லும்போது அல்லது அதில் ஈடுபடும்போது நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை அமைக்கும் உத்தரவுகளைப் பிறப்பிக்க இவர்களுக்கு அதிகாரம் உள்ளது.

பள்ளியின் மைதானங்களில் அல்லது பள்ளியின் செயல்பாடுகள் நடைபெறும் பிற இடங்களுக்குள் நுழைவதையோ, அங்கு இருப்பதையோ இந்த உத்தரவு தடை செய்யலாம். பள்ளியிலோ பள்ளிச் செயல்பாடுகள் நடக்கும் பிற இடங்களிலோ குறிப்பிட்ட நபர்களிடம், குறிப்பிட்ட நேரங்களில், குறிப்பிட்ட விதமாக நடந்துக் கொள்ள உங்களுக்கு அனுமதி இல்லை என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கலாம். இந்தச் சிறப்புச் சூழல்கள் பற்றிய விவரங்களும் இடம்பெற்றிருக்கும். உதாரணமாக, ஓர் உத்தரவில் அது பொருந்தாத நேரம் மற்றும் இடம் பற்றிய தகவல்கள் இடம்பெறலாம்.

பள்ளியில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மற்றவர்கள் பாதுகாப்பாக உணரவே உங்களுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவு பற்றிய மேலதிகத் தகவல்களை இங்கே காணலாம். பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவுகள் என்ன செய்யும் என்பதைப் புரிந்துகொள்ள உதவும் வீடியோவை இங்கே காணலாம்.

**இந்த உத்தரவு எவ்வளவு காலம் நடைமுறையில் இருக்கும்?**

இந்த விதிகள் எவ்வளவு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என்பதையும் இந்த உத்தரவு உங்களுக்குத் தெரிவிக்கிறது. ஓர் உத்தரவு நடைமுறையில் இருக்கும் அதிகபட்ச கால அளவு 12 மாதங்கள் ஆகும்.

## பிறப்பிக்கப்படும் உத்தரவில் எனக்கு உடன்பாடு இல்லை என்று பள்ளிக்கு எப்படிச் சொல்வது?

அங்கீகரிக்கப்பட்ட நபர் ஓர் உத்தரவைப் பிறப்பிக்கும் முன், அவர் ஓர் உத்தரவைப் பிறப்பிக்க பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று ஏன் நினைக்கிறார் என்பதையும் அவர் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் குறிப்பிட்ட விதமாக ஏன் நடந்துக் கொண்டீர்கள், அது உங்களை அல்லது உங்கள் பிள்ளையை எப்படி பாதிக்கும் என்பதை அல்லது அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பிற விஷயங்களை விளக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் நீங்கள் ஒரு ‘சமர்ப்பிப்பை’ செய்யலாம். உதாரணமாக, உங்கள் பிள்ளைக்கு இயலாமை இருப்பதாக அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் நீங்கள் கூற விரும்பலாம், எனவே நீங்கள் தொடர்ந்து பள்ளிக்குச் சென்று அவர்களுக்கு உதவியாக இருப்பதை உறுதிசெய்ய தகுந்த ஏற்பாடுகளை அவரால் செய்ய முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட நபர் உத்தரவு பிறப்பிப்பது பற்றி யோசித்துக்கொண்டிருப்பதாக உங்களிடம் சொன்ன பிறகு, உங்கள் தரப்புக் கருத்தை சமர்ப்பிக்க உங்களுக்கு 7 நாட்கள் அவகாசம் உள்ளது. உங்களுக்குத் தேவைப்பட்டால் சமர்ப்பிப்பைச் செய்ய கூடுதல் காலம் வழங்கும்படியும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

எழுத்து மூலமான சமர்ப்பிப்பை அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு மின்னஞ்சல் மூலமாகவோ கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். நீங்கள் கல்வி மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்தில் உள்ள வார்ப்புருவைப் பயன்படுத்தலாம், அதற்கான இணைப்பு இதோ இங்கே.

நீங்கள் எழுத்து மூலமான சமர்ப்பிப்பை மேற்கொள்ள விரும்பவில்லை என்றால், அதற்குப் பதிலாக வாய்மொழி சமர்ப்பிப்பை வழங்க அனுமதிக்குமாறு கேட்கலாம். இயலாமை காரணமாக உங்களின் உதவியாளர் அல்லது மொழிபெயர்ப்பாளர் உங்களுக்காக சமர்ப்பிப்பு செய்வதை ஏற்றுக்கொள்ளுமாறும் நீங்கள் அவர்களிடம் கேட்கலாம்.

### எனது பிள்ளை பள்ளியில் படிக்கிறார் என்றால், நான் இந்த நடைமுறையில் இருக்கும் உத்தரவைப் பின்பற்ற வேண்டியுள்ளதால் அவர்களுக்கு என்ன நடக்கும்?

இந்த உத்தரவு உங்கள் பிள்ளையை எவ்வாறு பாதிக்கும் மற்றும் நீங்கள் அவர்களை எவ்வாறு கவனித்துக்கொள்கிறீர்கள் என்பதைப் பற்றி உங்கள் பள்ளி கவனமாகச் சிந்தித்துள்ளது. நீங்கள் அவர்களைக் கவனித்துக்கொள்வதற்கும் அல்லது அவர்களின் கல்வியில் ஈடுபடுவதற்கும் இந்த உத்தரவு தடையாக இருக்காது.

உங்கள் பள்ளி உங்களுக்கு ஒரு உத்தரவை வழங்கியவுடன் கூடிய விரைவில் அதற்கான ‘தொடர்புகள் மற்றும் அணுகல் நெறிமுறையை’உங்களுக்கு வழங்கும். இது பின்வரும் விஷயங்களை நெறிமுறைப்படுத்தும்:

- உங்கள் பிள்ளையின் கல்வி விஷயங்கள் பற்றி உங்களுக்குச் சொல்லப்படும் முறை
- உங்கள் பிள்ளை எப்படி பள்ளிக்குச் சென்று பள்ளி நடவடிக்கைகளில் பாதுகாப்பாகப் பங்கேற்கலாம்
- உங்கள் பிள்ளைக்கு ஆதரவு வழங்கப்படுவதையும் கவனிப்பு வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த அவர்கள் என்ன செய்வார்கள்

### நான் உத்தரவைப் பின்பற்றவில்லை என்றால் என்ன நடக்கும்?

உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை நீங்கள் பின்பற்றவில்லை என்றால், உங்களை உத்தரவைப் பின்பற்ற வைக்கும் வகையில் பள்ளியானது குற்றவியல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம்.

நீங்கள் உத்தரவைப் பின்பற்றாமல் தவறு செய்துள்ளீர்கள் என்று குற்றவியல் நீதிமன்றம் கண்டறிந்தால், அவர்கள்:

- உங்களை அபராதம் செலுத்தச் சொல்லலாம்
- உத்தரவுக்கு இணங்கி நடக்கும்படி ஆணையிடலாம்
- உத்தரவுக்கு இணங்கி நடக்க குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்குமாறு சொல்லலாம்
- பொருத்தமானது என்று நீதிமன்றம் நினைக்கும் வேறு எதையும் செய்யச் சொல்லலாம்

உத்தரவைப் பின்பற்றாததற்காக நீங்கள் சிறையில் அடைக்கப்பட மாட்டீர்கள், உங்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்படாது அல்லது நீங்கள் குற்றவியல் தண்டனையைப் பெற மாட்டீர்கள்.

## உத்தரவை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் என்ன செய்வது?

உத்தரவில் உள்ள விதிகளை நீக்கவோ மாற்றவோ விரும்பினால், அந்த மாற்றங்களைச் செய்ய உத்தரவைப் பிறப்பித்த அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் கேட்கலாம். அங்கீகரிக்கப்பட்ட நபர் ஒப்புக்கொண்டால், அவர்கள் மாற்றப்பட்ட உத்தரவின் எழுத்துப்பூர்வ நகலை உங்களுக்கு வழங்க வேண்டும். அவர்கள் உடன்படவில்லை என்றால், அவர்கள் நடைமுறையில் இருக்கும் உத்தரவின் போது மேற்கொண்ட அதே விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நபர் உத்தரவு ஒன்றில் புதிய விதிகளைச் சேர்க்க விரும்பினால், அவர் நடைமுறையில் இருக்கும் உத்தரவைச் செய்த போது மேற்கொண்ட அதே விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

## நான் உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய விரும்பினால் என்ன செய்வது?

பின்வரும் காரணங்களுக்காக நீங்கள் உங்கள் பள்ளிக்கு எதிராக உத்தரவை மேல்முறையீடு செய்ய விண்ணப்பிக்கலாம்:

- உங்களுக்கு எதிராக ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நீங்கள் உத்தரவை ஒப்புக்கொள்ளவில்லை என்றால்
- உத்தரவில் ஏதேனும் ஒன்றை மாற்றுமாறு நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் கேட்டிருந்து, அவர்கள் அதனை மறுத்து, அது குறித்து நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்றால்
- அங்கீகரிக்கப்பட்ட நபர் உத்தரவை மாற்றி, அந்த முடிவில் நீங்கள் திருப்தியடையவில்லை என்றால்
- அங்கீகரிக்கப்பட்ட நபர் உத்தரவை ரத்து செய்ய வேண்டாம் என்று முடிவு செய்து அந்த முடிவில் நீங்கள் திருப்தியடையவில்லை என்றால்

உங்கள் விண்ணப்பம் பள்ளி முதல்வருக்கு அனுப்பப்பட்டதிலிருந்து 28 நாட்களுக்குள் உள் மதிப்பாய்வு முடிவு எடுக்கப்படலாம். உங்களுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்குப் பின்னால் உள்ள காரணங்களையும், நீங்கள் சமர்ப்பித்துள்ள காரணங்களையும் கவனமாக மதிப்பிடுவதற்கு இந்த நேரம் பயன்படுத்தப்படும்.

உள் மதிப்பாய்வாளர் உத்தரவில் மாற்றங்களைச் செய்யலாம், உத்தரவை ரத்து செய்யலாம் அல்லது எதையும் மாற்றாமல் இருக்கலாம். ஒரு முடிவு எடுக்கப்பட்டதும், மின்னஞ்சல் மற்றும்/அல்லது தபால் மூலம் உங்களுக்கு அது குறித்து தெரிவிக்கப்படும், மேலும் எடுக்கப்பட்ட முடிவைப் புரிந்துகொள்ள உதவும் உள் மதிப்பாய்வின் முடிவுக்கான காரணங்களின் நகலைப் பெறுவீர்கள்.

உள் மதிப்பாய்வின் முடிவில் நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்றால், விக்டோரியன் சிவில் மற்றும் நிர்வாக தீர்ப்பாயத்தில் நீங்கள் மேல்முறையீடு செய்யலாம். இதனைப் பற்றிய மேலதிகத் தகவல்களை, கல்வி மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்தில் இங்கே காணலாம்.

**எனக்கு மொழிபெயர்ப்பாளர் அல்லது பிற உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?**

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் அல்லது உதவியாளர் தேவைப்பட்டால், பள்ளி முதல்வரிடம் தெரிவிக்கலாம்; அவர் உங்களுக்குத் தேவையான ஆதரவை ஏற்பாடு செய்வார்.

உங்கள் பிள்ளை அரசுப் பள்ளிக்குச் சென்றால், மேலதிக உதவிக்கு கல்வி மற்றும் பயிற்சித் துறையின் பிராந்திய அலுவலகத்தையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| வடகிழக்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 333 231<br>மின்னஞ்சல்: nevr@education.vic.gov.au | வடமேற்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 338 691<br>மின்னஞ்சல்: nwvr@education.vic.gov.au |
| தென்கிழக்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 338 738<br>மின்னஞ்சல்: sevr@education.vic.gov.au | தென் மேற்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 333 232<br>மின்னஞ்சல்: swvr@education.vic.gov.au |

**எனக்கு மேலதிகத் தகவல் தேவைப்பட்டால் எங்கே பெறுவது?**

மேலதிகத் தகவலைப் பெற, கல்வி மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்திற்கு செல்ல இங்கே கிளிக் செய்யவும்.